தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 264 | 4 Pages | 22.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 264 | 4 பக்கங்கள் | 22.4.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்**

**விளக்கம்:**

வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்.

## ஷேக் ஹசீனாவுக்கு எதிராக 'இன்டர்போல்' உதவியை நாடிய வங்காளதேசம்



டாக்கா, ஏப்.22

வங்காளதேசத்தில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரலாறுகாணாதன்முறைஏற்பட்டது.இந்தவன்முறையை தொடர்ந்து ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து முகமது யூனுஸ் தலைமையில் வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது.

ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை மற்றும் ஊழல் வழக்கு வங்காளதேசத்தில் பதிவு செய்யபட்டுள்ளது. அவருக்கு எதிராக கைது வாரண்ட்டும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அவரை வங்காள தேசத்திற்கு திருப்பி அனுப்பும்படி அந்நாட்டு அதிகாரிகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். எனினும், ஷேக் ஹசீனாவை நாடு கடத்தும் கோரிக்கையை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

இந்நிலையில், இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள ஷேக் ஹசீனாவிற்கு எதிராக ரெட் கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்க வலியுறுத்தி இன்டர்போலுக்கு வங்காளதேசம் கோரிக்கை விடுத்துள்ளது. ஷேக் ஹசீனா மட்டுமின்றி மேலும் 12 பேருக்கு எதிராக ரெட் கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்க கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

## போரிடுவதைத்தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை நேதன்யாகு



டெல் அவிவ், ஏப்.22

இஸ்ரேல்காசா இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காசா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த போாில் பாலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். 2 ஆண்டுகளுக்குமேல் நடைபெற்று வரும் போரில், காசாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது. காசா மீதான இஸ்ரேல் தாக்குதல்களில் கடந்த 2 நாட்களில் 90க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

இந்தநிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறியதாவது:

காசாவில்போரிடுவதைத்தவிரவேறுவழியில்லை.ஹமாஸ்அழிக்கப்பட்டு, பணயக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படும் வரை போரை முடிவுக்குக் கொண்டுவர இயலாது. அவ்வாறு போரிட்டால்தான், இஸ்ரேலுக்கு ஹமாஸ் படையினரால் அச்சுறுத்தல் இருக்காது. போரைத்தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை என்று தெரிவித்தார்.

## அமெரிக்கா சென்ற ராகுல் காந்திக்கு வரவேற்பு




அமெரிக்கா, ஏப்.22

மக்களவை எதிர்கட்சி தலைவரான ராகுல்காந்தி 2 நாட்கள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி இரண்டு நாட்கள் பயணமாக நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

இந்நிலையில், இன்று அதிகாலை அமெரிக்காவின் பாஸ்டன் நகருக்கு சென்றடைந்த அவருக்கு விமான நிலையத்தில் காங்கிரஸ் வெளிநாட்டு விவகாரங்கள் பிரிவு தலைவர் சாம் பிட்ரோடா தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## நாடு முழுவதும் டிரம்ப்பிற்கு எதிராக வலுக்கும் போராட்டம்

வாஷிங்டன், ஏப்.22

அமெரிக்காவில் டிரம்ப் அரசு பதவியேற்ற பிறகு பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. டிரம்ப் நிர்வாகத்தில் அரசாங்க திறன் துறை தலைவர் எலான் மஸ்க், அரசின் பல்வேறு துறைகளில் உள்ள ஊழியர்களை பணி நீக்கம் செய்தார். செலவின குறைப்பு நடவடிக்கையாக இத்தகைய முடிவுகளை டிரம்ப் நிர்வாகம் எடுத்தது.

ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், தொழிலாளர் அமைப்புகள் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தன. இந்த வழக்கை விசாரித்த அமெரிக்க பெடரல் கோர்ட்டு, பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணிக்கு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. ஜனாதிபதி டிரம்ப் பதவி ஏற்றது முதல் அரசு ஊழியர்கள் சுமார் 2,00,000 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இது போன்ற முடிவுகளுக்கு அமெரிக்க மக்கள் பல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் குதித்துள்ளனர். சர்வாதிகாரத்திற்கு எதிராக ஜனநாயகத்தை பாதுகாக்க போராட்டத்தை துவக்கி உள்ளதாகவும், மீண்டும் ஒரு சுதந்திர புரட்சியை உருவாக்குவோம் என்கின்றனர் போராட்டக்காரர்கள் .

சனிக்கிழமை முதல் போராட்டத்தை துவங்கி உள்ளனர். இந்த போராட்டம் 50 மாகாணங்களில் 400 க்கும் மேற்பட்ட பேரணிகள் நடத்தி வருகின்றனர் . பலரும் டிரம்ப்பிற்கு எதிராக பதாகைகள் ஏந்தி போராடி வருகின்றனர்.

டவுன்டவுன், சான்பிரான்சிஸ்கோ உள்ளிட்ட மாகாணங்களில் ஒரு கோடிக்கும் மேல் போராட்டக்காரர்கள் திரண்டு இருப்பதாக ஒருங்கிணைப்பு கமிட்டியினர் தெரிவிக்கின்றனர்.

ஓரிகானின் போர்ட்லேண்ட் நகர மையத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் டிரம்ப்பிற்கு எதிராக கோஷங்களை எழுப்பிய படியே அணிவகுத்துச் சென்றனர் சான் பிரான்சிஸ்கோவில், பசிபிக் பெருங்கடலை ஒட்டிய மணல் கடற்கரையில்நூற்றுக்கணக்கானவர்கள்"இம்பீச்&ரிமூவ்"என்றவார்த்தைகளை உச்சரித்தனர். மேலும் தலைகீழாக அமெரிக்கக் கொடியை பிடித்து இருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கூறுகையில், டிரம்ப்பின் பாசிச ஆட்சி இப்போது ஒழிய வேண்டும் அவர் நீதிமன்றங்களை மீறுகிறார் என்று கூறினார். நாடு முழுவதும் இன்னும் போராட்டங்கள் வலுக்கும் என்பதால் டிரம்ப் நிர்வாகம் அதிர்ந்து போய் உள்ளது.

# ஒட்டுமொத்த நாட்டிற்கே திமுக கூட்டணி முன்மாதிரியாக இருக்கும்: மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி பேட்டி

சென்னை, ஏப்.22

திமுக கூட்டணி ஒட்டுமொத்த நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாக இருக்கும் என மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி தெரிவித்தார். மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி நேற்று அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பிறகு, நிருபர்களுக்கு அளித்த பேட்டி: திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாட்டு மக்கள் மிகப் பெரிய ஆதரவை அளித்துவருகிறார்கள். மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு மக்களின் ஆதரவோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடனான சந்திப்பின் போது, மதவாத சக்திகளுக்கு கடும் பதிலடி கொடுக்க ஜனநாயக மதச் சார்பற்ற, முற்போக்கு அரசியல் சக்திகளின் தலைமையில் தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்துள்ளது குறித்தும், அதை வலுவாக கட்டியெழுப்புவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு குறித்து பேசினோம். தற்போது, பாஜ மற்றும் அதிமுக கட்சிகள் சந்தர்ப்பவாத கூட்டணியை அமைத்துள்ளது.பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ்சின் வழிகாட்டுதலின்படி, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான அரசு நாட்டில் மதச்சார்பின்மை, சிறுபான்மையினர் உரிமை, ஜனநாயக உரிமைகளை திட்டமிட்டு சீர்குலைத்துவருவதை நாம் பார்த்து வருகிறோம்.



வக்பு திருத்த மசோதாவை, பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது, சிறுபான்மையினர் உரிமைகள் எவ்வாறு தாக்கப்படுகின்றன என்பதற்கு சமீபத்திய உதாரணம் ஆகும். நாடாளுமன்றத்தில் இந்த வக்பு மசோதாவுக்கு எதிராக அதிமுக வாக்களித்தது. அதே நேரத்தில், அவர்கள் பாஜகவுடன் சேர்ந்தது சிறுபான்மையினருக்கு எதிரானதாகும்.இப்போது உச்ச நீதிமன்றம் இந்த வக்பு சட்டத்தைப் பற்றி, கடுமையான விமர்சனங்களை வைத்துள்ளது.வக்பு சட்டத்தின் பல விதிகள்சிறுபான்மையினருக்குஅரசியல் சாசன உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக உள்ளது என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

அதேபோல், உச்சநீதிமன்றம், ஆளுநர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பினை வழங்கியுள்ளது. சட்டப் போராட்டத்தின் மூலம் இதை பெற்றுதந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு வாழ்த்துகள். தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு,

மாநில அரசுகளின் உரிமைகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, மிக முக்கியமான வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிருக்கிறது.

எனவே, நாங்கள் நட்பு ரீதியாக விவாதித்தோம். மேலும், ஒரு வருடத்திற்குள் சட்டமன்றத் தேர்தல் வரும் நிலையில் தமிழ்நாட்டில் முற்போக்கு மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது என்றும் முடிவெடுத்துள்ளோம்.

மேலும், இந்த அணி ஒட்டுமொத்த நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாக இருக்கும். இதில் பலரும் சேர்வது மேலும் பலமாக இருக்கும்.பாஜகவுக்கும், அதிமுகவுக்கும் இடையே சந்தர்ப்பவாத கூட்டணி ஏற்பட்டுள்ளதால், மக்கள் திமுக தலைமையிலான அணிக்கு மேலும், வலு சேர்ப்பார்கள் என்று நம்புகிறோம். இவ்வாறு தெரிவித்தார்.

## மதுரை மாவட்டத்தில் செய்தியாளர் சுற்றுப் பயணம்; மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

மதுரை மாவட்டம் செய்தியாளர் சுற்றுப் பயணம் இனி வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் மூலம் காய்கறிகளை ஆர்டர் செய்து கொள்ளும் வகையில் உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா.சௌ.சங்கீதா, இஆப, அவர்கள் கேட்டறிந்தார்.

மதுரை மாவட்டத்தில் அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய 4 இடங்களில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளை டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா சௌ. சங்கீதா. இஆப. அவர்கள், செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா.சௌ.சங்கீதா. இ.ஆய. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

தமிழகத்தில் முதல் முறையாக கடந்த 2000வது ஆண்டு அப்போதைய முதல்அமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரை அண்ணாநகரில் உழவர்சந்தைதிட்டத்தை தொடங்கி வைத்தார். இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை பொதுமக்கள் வாங்கும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்திற்கு பிறகும் இந்த திட்டத்தின் முக்கியத்துவம் கருதி இந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வந்தது.





மதுரையில் தற்போது அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய 4 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், அதிகரித்து வரும் விற்பனையை கருத்தில்கொண்டுஉழவர்சந்தையில் இருந்து வீடுகளுக்கே நேரடியாக டோர் டெலிவரி செய்யும் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்காக சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையில் உள்ள உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுகின்றன.

விரைவில் மதுரையிலுள்ள உழவர் சந்தைகளில் இருந்து பொது மக்களின் வீடுகளுக்கு நேரடியாக காய்கறிகள் விற்பனை செய்யும் திட்டம் தொடங்கப்படும். தற்போது அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. மேலும், உழவர் சந்தைகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு பதிவுசெய்த விவசாயிகளுக்கு எலக்ட்ரானிக் தராசுகள் வழங்கப் படும்.

அண்ணாநகர் உழவர் சந்தையிலிருந்து மாட்டுத்தாவணி மார்க்கெட் வெறும் 2 கி.மீ. தொலைவே உள்ள போதிலும், பொது மக்கள் உழவர் சந்தைகளிலேயே காய்கறிகளை வாங்க விரும்புகின்றனர். இங்கு குளிர்பதன கிடங்கு உள்ளிட்ட போதிய சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகளின் கோரிக்கையினை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சேமிப்பு கிடங்கு வசதிகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா.சௌ.சங்கீதா. இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.



மதுரை மாநகர் திருப்பரங்குன்றம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பாதுகாப்பு நலன் கருதி மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் , உத்தரவின்படி திருப்பரங்குன்றம் கோவிலில் புதிய காவல் நிலையம் திறப்பு விழாநடைபெற்றது.இந்த விழாவில் காவல்துறை ஆணையர் தெற்கு இனிக்கோ திவ்யன் தலைமையேற்று திறந்து வைத்தார். உடன் திருப்பரங்குன்றம் கோவில் அறங்காவலர்கள் மற்றும் திருப்பரங்குன்றம் சரகம் காவல் உதவி ஆணையாளர் சசி பிரியா, திருப்பரங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர்கள் மீனாட்சி சுந்தரம் மற்றும் ஆய்வாளர் ராஜதுரை மற்றும் அறங்காவலர் குழு தலைவர் சத்ய பிரியா , அறங்காவலர்கள் குழு உறுப்பினர் சண்முகசுந்தரம் காவலர்கள், மகளிர் காவலர்கள் என பலரும் கலந்து கொண்டுஇந்த விழாவை சிறப்பித்தனர்.

## ஆதிதிராவிட மக்களின் 20 ஆண்டுகால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி... இலவச பட்டா வழங்கும் நிகழ்ச்சி... தமிழரசி ரவிக்குமார், பொன்னுச்சாமி, இராஜாமணி, அண்ணாத்துரை, வளர்மதி பங்கேற்பு



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் அரிமண்டபம் , சின்னக்கண்ணனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 ஆதிதிராவிடர் உள்ளிட்ட மொத்தம் 84 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சியானது வட்டாட்சியர் கிருஷ்ணகுமார், மண்டல துணை வட்டாட்சியர் சரவணக்குமார், ஆகியோர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் வழங்கினார்.

அப்போது பேசிய சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் இந்த பிரச்சினையானது மிகவும் நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாத பட்டாக்கள் பிரச்சினையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உடனடியாகதீர்த்து வைத்துள்ளார் எனவும் இத்தகைய செயல்பாடுகள், நலத்திட்டங்கள் கடந்த பத்தாண்டுகால ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்படவே இல்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசும் போது தமிழக முதலமைச்சர், மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரது திராவிட மாடல் ஆட்சியில் மாவட்ட அமைச்சரான தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர் பெரியகருப்பன் அவர்களின் வழிகாட்டலோடு செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்..

இந்த நிகழ்ச்சிக்கு நகரம் பொன்னுச்சாமி ஒன்றியக்கழக செயலாளர்கள் துரை. இராஜாமணி, வழக்கறிஞர் அண்ணாத்துரை , மாவட்டமகளிரணி துணை அமைப்பாளர் வளர்மதி கலைச்செல்வன், நகர்க்கழக திமுக நிர்வாகிகள் தேசிங்குராஜா, சிவாஜி, உள்ளிட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

பட்டாக்களை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டனர்.



## தேவகோட்டை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழக முதலமைச்சர் பிறந்தநாள் விழா; 1072 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா , பாட்டு பட்டிமன்றம்; நாகானி ரவி தலைமை, ஏற்பாடு



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 1072 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் இன்னிசை வேந்தர் அரு. நாகப்பன் குழுவினரின் பாட்டு பட்டிமன்றம் வெகுசிறப்பாக நடைபெற்றது..

மாவட்ட விவசாய தொழிலாளரணி அமைப்பாளர் வழக்கறிஞர் இராஜபாண்டியன், ஒன்றிய மேனாள் கவுன்சிலர் ஆர். எம். கென்னடி ஆகியோர் வரவேற்புரையாற்றிட தேவகோட்டை தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் நாகானி ரவி தலைமையிலும் அவைத்தலைவர் சின்னத்துரை சின்னத்துரை, பொருளாளர் செந்தில்குமார், துணைச் செயலாளர்கள் ஜெயராணி செல்வேந்திரன், பாண்டி, மாவட்ட பிரதிநிதிகள் கணேசன், ரவிச்சந்திரன் , ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது...

இதனிடையே தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்டக்கழகசெயலாளர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு நலத்திட்டங்களை 1072 பெண்களுக்கு வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் பெரியகருப்பன் இந்த இயக்கமானது கொள்கை கோட்பாடுகளுக்காகவே உருவாக்கப்பட்ட இயக்கமாகும், சமூகத்தில் குறிப்பாக பெண்களின் வாழ்க்கையில் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் உள்ளாட்சியில் சம உரிமை, சொத்தில் சம உரிமை ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம்ஸவகுப்பு வரையில் பெண்கள் மட்டுமே ஆசிரியராகப் பணியமர்த்துதல், பெண் காவலர்கள் உள்ளிட்ட இப்படி எத்தனையோ பல நல்ல திட்டங்களை சட்டங்களை உருவாக்கித்தந்தது திராவிட முன்னேற்றக்கழக அரசு ஆகும் எனவும் இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியாக தளபதியார் திராவிட மாடல் ஆட்சியில் மாதாந்திர உரிமைத்தொகையாக ரூபாய் ஆயிரம், பேருந்துகளில் விடியல் பயணம் , உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், புதுமைப்பெண் திட்டம், சொத்துப்பதிவுகளில் ஒரு சதவீதம் பதிவுக்கட்டணம் குறைப்பு இப்படி பெண்களது சமூக மாற்றங்களை உருவாக்கித்தந்தது கழக அரசு என பெருமிதம் தெரிவித்தார்...

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை நகர்க்கழக செயலாளர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் கவுன்சிலர் பெரி. பாலமுருகன் அம்பலம், ஒன்றியக்கழக செயலாளரகள் பூபாளசிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மேனாள் மாவட்ட கவுன்சிலர் நாகானி பா. செந்தில்குமார், தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் தேவகோட்டை மதார் சேட், மாவட்ட நிர்வாகிகள் இராஜபாண்டியன் கதிர். இராஜ்குமார், பிரிண்ஸ் சசிவர்ணம், ஐடி விங். வழக்கறிஞர் எஸ். ஆர். வினோத், மெ. காளிமுத்து, முப்பையூர் சிவா , தேவகோட்டை அழகையா , ருக்மா சரவணன், வர்த்தக அணி த. சரவணன், திருப்புவனம் பேரூராட்சி துணைத்தலைவர் ரஹ்மத்துல்லா ஹான், பாலகிருஷ்ணன், அசோக், சிவனேசன், பிள்ளையார்பட்டி சதீஷ் குமார், தேவகோட்டை ஜாஹீர் உஸேன் , தல கணேஷ், வழக்கறிஞர் வீரசரத்குமார், சிவக்குமார் உள்ளிட்ட ஏராளமான ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

கூட்டத்தின் இறுதியில் காரைக்குடி சட்டமன்ற தொகுதி திமுக ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் முப்பையூர் சிவா நன்றி கூறினார்...

## ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் கலைஞர் கலையரங்கம் : உதயநிதி திறந்து வைத்தார்



சென்னை, ஏப்.22

துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (20.4.2025) நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் 1,000 இருக்கைகள் வசதியுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை திறந்து வைத்துஉரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, .க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் தெத்தூர் அஞ்சல் கொழிஞ்சிப்பட்டி கிராமத்தில் நடந்த மாபெரும் கிரிக்கெட் போட்டியில் முதல் பரிசை தெத்தூர் வல்லவன் பாய்ஸ் வென்றுள்ளது. இரண்டாவது பரிசை பாலமேடு நட்பே துணை வென்றது. மூன்றாவது பரிசை கொழிஞ்சிப்பட்டி முத்தாலம்மன் கிரிக்கெட் அணி வென்றது. நான்காவது பரிசை குறவன்குளம் பிரேம் நண்பர்கள் அணி வென்றது.

## சிவகங்கையில் மாற்றுத்திறனாளிகள் அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் நலச்சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டு



அன்மையில் தமிழக முதலமைச்சர் சட்டப்பேரவையில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன பிரதிநிதித்துவம் வழங்கிட சட்டமியற்றியதையடுத்து முதலமைச்சர்க்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மாநில ஒருங்கிணைப்பாளர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சிவகங்கை மாவட்ட தலைவர் சோம. அசோக்பாரதி முன்னிலை வகித்தார்.சங்கத்தின் செயலறிக்கையை தி. கண்ணன் வாசித்தார்..மாவட்ட இணை செயலாளர் மாயமணி சங்கு அனைவரையும் வரவேற்று பேசினார்.

கூட்டத்தினிடையே நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது... அதில் மாற்றுத்திறனாளிகளுக்கு என்று தனியாக உள்ளாட்சித் தேர்தலில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கிட ஆவணம் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுக்கள்,

அனைத்து அரசு அலுவலகங்களிலும் சாய்வுதள பாதை ஏற்படுத்தித்தர வேண்டும், தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணி புரியும் அரசு அலுவலர்களை இடம்மாறுதல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும், அரசு பணியில் பணியாற்றிடும் மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் நான்கு சதவீதம் இட ஒதுக்கீடு தரவேண்டும் என்றும்,அரசின் பல்வேறு துறைகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நிரந்தரமாக்குதல் உள்ளிட்ட நான்கு தீர்மானங்களை நிறைவேற்றினர்...இந்த கூட்டத்தில் மாவட்ட துணைத்தலைவர் பிரபாகரன், மாவட்ட துணைச்செயலாளர்கள் காளிதாஸ், ராஜ்குமார், துறை செயலாளர்கள் புகழ் கண்ணன், பூமிநாதன்,துணைத்தலைவர் முத்துப்பாண்டி, மாவட்ட மகளிரணி நாகலட்சுமி, இந்துமதி, பானுமதி உள்ளிட் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோவில்பட்டியில் பழ வியாபாரியை தாக்கி கொலை மிரட்டல்: 2 பெண்கள் உள்பட 4 பேர் கைது

தூத்துக்குடி ஏப்.22

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, வீரவாஞ்சிநகர் 3வது தெருவைச் சேர்ந்தவர் சேர்மதுரை மகன் மாரித்துரை (வயது 33). இவர் கோவில்பட்டி எட்டயபுரம் சாலையில் மாநில வணிகவரி அலுவலகம் அருகே பழ வியாபாரம் செய்துவருகிறார்.

இவருக்கும் வீரவாஞ்சிநகர் பகுதியைச் சேர்ந்த ராமையா மகன் ஜெயராஜ் (62) என்பவருக்கும் இடையே நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் சம்பவத்தன்று ஜெயராஜ் உள்பட 5 பேர் மாரித்துரையை அவதூறாக பேசி தாக்கி, கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் காயமடைந்த மாரித்துரை, கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து அவர் அளித்த புகாரின் பேரில், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து ஜெயராஜ், அவரது மனைவி மல்லிகா (55), கயத்தாறு ஜே.ஜே. நகரைச் சேர்ந்த தங்கத்துரை மகன் சந்தனசெல்வம் (25), தங்கத்துரை மனைவி ஆரோக்கியமேரி (45) ஆகிய 4 பேரை கைது செய்தனர். மேலும் ஒருவரை தேடி வருகின்றனர்.

## கிருஷ்ணகிரி: கஞ்சா, புகையிலை பொருட்கள் விற்பனை செய்த 15 பேர் கைது

கிருஷ்ணகிரி, ஏப்.22

கிருஷ்ணகிரி மாவட்டத்தில எங்கும் கஞ்சா விற்பனை நடைபெறுகிறதா? என போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். அந்த வகையில் ஓசூர் மதுவிலக்கு அமல்பிரிவு போலீசார் நேற்று முன்தினம் அடவிசாமிபுரம், நல்லூர் கெலவரப்பள்ளி அகதிகள் முகாம் அருகில் ரோந்து சென்றனர். அப்போது, அந்த பகுதியில் கஞ்சா வைத்து விற்பனை செய்த காமையூரை சேர்ந்த பிரபாகரன் (வயது 32), கெலவரப்பள்ளி அகதிகள் முகாம் பகுதியை சேர்ந்த கணேசன் (70) ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ரூ.350 மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோல கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்ததாக துறிஞ்சிப்பட்டி நாகராஜ் (57),

சிவம்பட்டி ஆறுமுகம் (42), சுண்டேகுப்பம் சண்முகம் உள்பட மொத்தம் 13 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

இதையடுத்து அவர்களிடம் இருந்து ரூ.1,300 மதிப்புள்ள குட்கா பறிமுதல் செய்யப்பட்டது. மாவட்டத்தில் கஞ்சா, புகையிலை பொருட்கள் விற்பனை செய்த 15 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

## சென்னையில் மனைவி கண் முன்னே ரவுடி ஓட ஓட வெட்டிக்கொலை

சென்னை, ஏப்.22

சென்னை வியாசர்பாடி பகுதியை சேர்ந்தவர் ரவுடி தொண்டை ராஜ். இவர் மீது பல்வேறு கொலை வழக்குகள் உள்ளன. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு சிறையில் இருந்து வெளியே வந்திருந்தார்.

இந்த நிலையில், தொண்டைராஜ் இன்று தனது மனைவியுடன் வியாசர்பாடி பகுதியில் சென்றுகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்மகும்பல்,தொண்டை ராஜை ஓட ஓட சரமாரியாக வெட்டிவிட்டு தப்பியோடினர். இதனால் ரத்த வெள்ளத்தில் மனைவி கண் முன்னே சம்பவ இடத்திலேயே தொண்டை ராஜ் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து, வெறிச்செயலில் ஈடுபட்ட மர்ம நபர்களை தேடி வருகின்றனர். பட்டப்பகலில் ரவுடி ஓட ஓட வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் வியாசர்பாடியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தூத்துக்குடியில் பயங்கரம்: கப்பல் மாலுமி வெட்டிக்கொலை




தூத்துக்குடி, ஏப்.22

தூத்துக்குடி மாநகரில் திரேஸ்புரம், லூர்தம்மாள்புரத்தைச் சேர்ந்த சகாயகுமார்மகன் மரடோனா (வயது 30), கப்பலில் மாலுமியாக வேலை பார்த்து வந்தார். இவருக்கு திருமணமாகி மனைவியும் ஒரு மகனும் உள்ளனர். இவர் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கடந்த 2 வாரங்களுக்கு முன்புதான் கப்பலில் இருந்து வீட்டுக்கு வந்துள்ளார்.

தனது வீட்டு முன்பு நின்று கொண்டிருந்த போது அதே பகுதியைச் சேர்ந்த மதன்குமார், ரெக்ஸன் உள்பட 3 பேர் ஒரே பைக்கில் வேகமாக சென்றுள்ளனர். இதை பார்த்த மரடோனா அவர்களை கூப்பிட்டு சத்தம் போட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த மதன்குமார் உள்ளிட்டவர்கள் அரிவாளால் மரடோனாவை சரமாரியாக தலையில் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த மரடோனாதூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனளிக்காமல் இன்று காலையில் உயிரிழந்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில் தூத்துக்குடி வடபாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் வழக்கு பதிவு செய்து, மதன்குமார் உள்பட 3 பேரை போலீசார் தேடி வருகின்றனர். மதன்குமார் மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் காவல் நிலையத்தில் உள்ளதாக கூறப்படுகிறது. இந்த கொடூர கொலை சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## திருமண மேடையில் மணப்பெண் ரூபத்தில் மாப்பிள்ளைக்கு காத்திருந்த அதிர்ச்சி



லக்னோ, ஏப்.22


உத்தரபிரதேச மாநிலம் மீரட்டில் உள்ள பிரம்மபுரியைச் சேர்ந்தவர், முகமது அசீம் (22). இவருக்கு ஷாம்லி டிஸ்ட்ரிக்கைச் சேர்ந்த மந்தாஷா என்ற இளம்பெண்ணுடன் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தது. அந்த திருமணத்தை, மந்தாஷாவின் சகோதரர் நதீம் மற்றும் அவரது மனைவி ஷைதா ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.இந்த நிலையில், அவர்களுடைய திருமணம் கடந்த மாதம் 31ஆம் தேதி நடைபெற்றுள்ளது. த

திருமணம் முடிந்தப் பிறகு மணப்பெண்ணின் முக்காட்டைத் தூக்கி மணமகன் முகமது அசீம் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். அதாவது, நிச்சயிக்கப்பட்ட மணப்பெண் மந்தாஷாவுக்குப் பதில் அவரது விதவைத் தாயார் மணக்கோலத்தில் இருந்துள்ளார். இதனால், தாம் ஏமாற்றப்பட்டதைக் கண்டு மணப்பெண்ணின் குடும்பத்தார் மீது அசீம் போலீஸில் புகார் அளித்தார்.

மேலும், இத்திருமண விழாவுக்காக ரூ.5 லட்சம் செலவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த விவகாரம் தொடர்பாக தற்போது இருதரப்பிலும் சமாதானம் அடைந்திருப்பதாகவும், அசீம் தன்னுடைய புகாரை வாபஸ் பெற்றுள்ளதாகவும் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குப்பை பிரச்சினையில் லாரி ஏற்றி கொல்ல முயற்சி சேலத்தில் பரபரப்பு



சேலம், ஏப்.22

சேலம் மாவட்டம் ஆத்தூர் அம்மம்பாளையத்தை சேர்ந்தவர் மகேந்திரன். இவரது மனைவி அனிதா. இவர் நேற்று காலை வீட்டின் அருகே குப்பை கொட்டியுள்ளார்.

இது குறித்து அருகே வசிக்கும் பூபதி என்பவர் அனிதாவிடம் வாக்குவாதம் செய்துள்ளார். இதனால், இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பூபதி தனது நண்பரான பாலமுருகன் என்பவரிடம் கூறியுள்ளார். பின்னர், மதியம் 2 மணியளவில் பாலமுருகன் லாரியை ஓட்டி வந்துள்ளார். அப்போது, மீண்டும் அனிதாவின் குடும்பத்தினருக்கும் பூபதிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது, பால முருகன் லாரியை வேகமாக ஓட்டிவந்து அனிதா மற்றும் அவரின் குடும்பத்தினர்மீது மோத முற்பட்டுள்ளார். அப்போது, அனிதாவின் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார் மீது லாரி மோதியது.

இந்த சம்பவத்தில் கார் பலத்த சேதமடைந்தது.

லாரி மோத வருவதை உணர்ந்த அங்கிருந்த பெண்கள் உள்பட அனைவரும் அலறியடித்து ஓடினர். இந்த சம்பவம் தொடர்பான காட்சிகள் தற்போது சமூகவலைதளத்தில் வைரலானது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மின்சார ரெயில் சக்கரத்தில் திடீரென கிளம்பிய புகை பயணிகள் அவதி



விழுப்புரம், ஏப்.23

விழுப்புரத்தில் இருந்து தாம்பரம் வரை இயக்கப்படும் விழுப்புரம் பயணிகள் மின்சார ரயில் வழக்கம் போல் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ரயில் நிலையத்திற்கு காலை 6.35 மணிக்கு வந்தது. இதையடுத்து ரயில் மீண்டும் புறப்பட்டபோது, சக்கரத்தில் புகை கிளம்பி உள்ளது. இதையடுத்து பயணிகள் ஓட்டுனருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து உடனடியாக ரயில் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில்ஓட்டுநர் கீழே இறங்கி பார்த்த போது பிரேக் ஷூ சக்கரத்தில்

இறுக்கமாக பிடித்திருந்தது தெரியவந்தது இதையடுத்து அங்கிருந்த பயணிகள் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் பிரேக் கட்டையை அகற்றினர் இதைத் தொடர்ந்து40நிமிடங்கள் தாமதமாக ரயில் புறப்பட்டுச் சென்றது இதனால் பயணிகள் அவதி அடைந்தனர்

## திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் பிரசவத்தின் போது கர்ப்பிணி உயிரிழப்பு



திருச்செந்தூர், ஏப்.23

திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் பிரசவத்தின் போது கர்ப்பிணி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதிக ரத்தப்போக்கு காரணமாக குழந்தை பிறந்த சில நிமிடங்களில் தாய் பரிதாபமாக உயிரிழந்தார்,

போதிய டாக்டர்கள், செவிலியர்கள் இல்லாததேஇதுபோன்ற சம்பவங்களுக்கு காரணம் என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

# திருச்சி உறையூரில் கழிவு நீர் கலந்த குடிநீரால் 3 பேர் உயிரிழந்தார்கள் என்பது ஆதாரமற்ற செய்தி: அமைச்சர் கே.என்.நேரு!




திருச்சி, ஏப்.22
திருச்சி உறையூரில் கழிவுநீர்கலந்தகுடிநீரால் 3 பேர் உயிரிழந்தார்கள் என்பது ஆதாரமற்ற செய்தி என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார். திருச்சி மாநகராட்சியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததாக வெளியானதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிரியங்காஎன்றகுழந்தை இறந்ததற்கு கழிவுநீர்தான் காரணம் என்பதற்கு ஆதாரம் இல்லை என்று கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 3,500 புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன: அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்

சென்னை, ஏப்.22
தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 3,500 புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக சட்டப் பேரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல் தெரிவித்துள்ளார்.
புதிய பேருந்துகள் வர வர, 15 ஆண்டுகள் பழமையான பேருந்துகள் மாற்றப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நடிகர் சிவாஜி இல்லத்தை ஜப்தி செய்யும் உத்தரவை ரத்துசெய்தது சென்னை உயர்நீதிமன்றம்





சென்னை, ஏப்.22
நடிகர் சிவாஜி இல்லத்தை ஜப்தி செய்யும் உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. சிவாஜி கணேசனின் மூத்த மகனான ராம் குமாரின் மகனான திஷ்ந் ஜெகஜல கில்லாடி என்ற படத்திற்காக அவர் பெற்ற கடனை திருப்பி செலுத்துமாறு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல் கூதூர் இது தொடர்பாக நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டைஜப்தி செய்ய உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை எதிர்த்து நடிகர் பிரபு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். அந்த மனுவில் தான் அன்னை இல்லத்தின் முழு உரிமையாளர் என்றும், ஏற்கனவே வீட்டை உயில் மூலம் தனக்கு எழுதி வைத்து விட்டார் என்றும் தெரிவித்திருந்தார்.
அதே போல் இந்த வீட்டிற்கும் தனக்கும் எந்த தொடர்பில்லை என்று ராம் குமாரும் பிராமண பத்திர மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு இன்று காலை நீதிபதி அப்துல் குதூர் தலைமையில் விசாரணைக்கு வந்தது.
வழக்கை விசாரித்த நீதிபதி வீட்டை ஜப்தி செய்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.
நடிகர் பிரபு தாக்கல் செய்த மனுவை ஏற்று உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் ரத்துசெய்து ஆணை பிறப்பித்தது. நடிகர் பிரபுதான் அன்னை இல்லத்தின் முழு உரிமையாளர் என ஐகோர்ட் தெரிவித்தது.
மேலும் இந்த வில்லங்க பதிவில் நீதிமன்ற ஜப்தி உத்தரவை நீக்க பதிவுத்துறைக்கும், நீதிபதி உத்தரவிட்டார்.

# சித்திரை திருவிழாவை முன்னிட்டு மதுரை மாவட்டத்துக்கு மே 12ம் தேதி உள்ளூர் விடுமுறை: ஆட்சியர் அறிவிப்பு



மதுரை, ஏப்.22
சித்திரை திருவிழாவை முன்னிட்டு மதுரை மாவட்டத்துக்கு மே 12ம் தேதி உள்ளூர் விடுமுறை விடப்படும் என மாவட்ட ஆட்சியர் சங்கீதா அறிவித்துள்ளார்.
ஒவ்வொரு ஆண்டும் மதுரையில் சித்திரைத் திருவிழாநடைபெறுவது வழக்கம்.அந்தவகையில் இந்த ஆண்டிற்கான மதுரைசித்திரைதிருவிழா ஏப்ரல் 28ம் தேதி முதல் மே 15ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த சித்திரை திருவிழாவிற்கு ஏராளமான பக்தர்கள் வருகை தருவதால், அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது. சென்ற ஆண்டு 25 லட்சம் பக்தர்கள் திரண்டதாகவும், நடப்பாண்டு 30 லட்சம் பக்தர்கள் திரள்வார்கள் என்று மாநகராட்சி கணித்துள்ளது.
இந்த சித்திரை திருவிழாவைக் காண மதுரை மாவட்டம் மட்டுமின்றி பிற மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் அதிகளவில் வருவதால்,அவர்களுக்கு தேவையான உணவு, நீர், மோர் உள்ளிட்டவற்றை வழங்குவதற்கு உரிய அனுமதிபெறவேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவித்திருந்தார். இந்த நிலையில் மே 12ம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை ஒட்டி மதுரை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறையை ஈடுசெய்யும் விதமாக பின்னர் வரக்கூடிய ஒரு நாள் பணிநாளாக அறிவிக்கப்படும்என்றும் தெரிவித்தார்.

# நெல்லை இருட்டுக்கடை அல்வா உரிமையாளர் மருமகன் பல்ராம் சிங்குக்கு போலீசார் சம்மன்



நெல்லை, ஏப்.22
நெல்லை இருட்டுக்கடை அல்வா உரிமையாளர்மருமகன்பல்ராம்சிங்குக்கு பாளையங்கோட்டை போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர். கணவர் இருட்டுக்கடையை வரதட்சனையாக கேட்பதாக சுனிஷ்கா பாளையங்கோட்டை போலீஸில் புகார் அளித்திருந்தார்.தனக்கு பாஜக ஆதரவு உள்ளதாக மிரட்டியதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

# கொடிவேரி அணையில் 15 ஆயிரம் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்



கோபி , ஏப்.22
கொளுத்தும் வெயிலுக்கு இதமான குளியல் போட கொடிவேரி அணைக்கு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வந்தனர். ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள கொடிவேரி அணையானது சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணையாகும்.
சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு 15 அடி உயரத்தில் இருந்து அருவி போல் தண்ணீர் விழுவதாலும், ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பாக குளிக்க முடியும் என்பதாலும் ஒவ்வொரு அரசு விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் ஈரோடு மட்டுமின்றி கோவை, திருப்பூர், சேலம், நாமக்கல், கரூர் என பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கர்நாடக மாநிலம் மைசூர், பெங்களூர் போன்ற பெரு நகரங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் வருவது வழக்கம்.
வழக்கமாக மார்ச் மாத இறுதியில் தொடங்கும் கோடை வெயில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்தே தாக்க தொடங்கியது. கடந்த சில நாட்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் வெயிலுக்கு இதமான குளியல் போட கொடிவேரி அணைக்கு சுற்றுலா பயணிகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர்.
நேற்று விடுமுறை தினம் என்பதால் கூட்டம் அலைமோதியது. அருவி போல் கொட்டிய தண்ணீரில் அவர்கள் குளித்து மகிழ்ந்தனர். நேற்று மட்டும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் அணைக்கு வந்திருந்தனர். இதனால் அருவியில் குளிக்க இடமில்லாமல் பல சுற்றுலா பயணிகள் அவதிப்பட்டனர்.
சிறுவர் பூங்காவில் குழந்தைகளுடன் பெண்களும்உற்சாகமாகவிளையாடி, மணல் பரப்பில் அமர்ந்தும் விடுமுறையை உற்சாகமாக களித்தனர். பரிசல் பயணத்தை மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகள் கட்டாயமாக லைப் ஜாக்கெட் அணிந்த பிறகே பரிசலில் ஏற்ற வேண்டும் என பொதுப்பணித்துறையினர் உத்தரவிட்டு உள்ளனர்.
ஆனால் பரிசல் ஓட்டிகள் லைப் ஜாக்கெட் அணியாமலேயே சுற்றுலா பயணிகளை ஏற்றிச்சென்றனர். இதனால் கடந்த ஒரு வாரமாக பரிசல் பயணம் நிறுத்தப்பட்டது. இதனால் பரிசல் பயணத்தை எதிர்பார்த்து வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர். எனவே லைப்ஜாக்கெட்அணிந்து உரிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் பரிசலை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# கோவில் திருவிழாவில் பூக்குழியில் தவறி விழுந்த பக்தர் உயிரிழப்பு



விருதுநகர் ஏப்.22
விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள ஆயிரங்கண் மாரியம்மன் கோவிலில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த திருவிழாவில் முக்கிய நிகழ்வான பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இருபதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் பூக்குழி இறங்கி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.
இந்த நிலையில் முத்துக்குமார் என்ற பக்தர் பூக்குழியில் இறங்கி நடந்து சென்றபோது கால்தடுமாறிவிழுந்ததில் படுகாயமடைந்தார். அவரை அருகில் இருந்த தீயணைப்புத்துறையினர் உடனடியாகமீட்டுஅருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.
அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் முத்துக்குமார் மதுரை அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் இன்று அவர்சிகிச்சைபலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

# ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் சிறப்பு திருப்பலிகள்



தென்காசி, ஏப்.22
தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு திருப்பலிகள் நடந்தது. கிறிஸ்தவர்களின் தவக்காலம் கடந்த மார்ச் 5ம் தேதி சாம்பல் புதனுடன் துவங்கியது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் மாலையில் சிலுவைப்பாதையும், முதல் ஞாயிறன்று தவக்கால திருப்பயணம் மேற்கொண்டனர்.
இரண்டாவது வாரமாக செங்கோல் நகர் கிளை பங்கிற்கு தவக்கால பயணம், மூன்றாவது வாரமாக இளையோர் இளம் பெண்கள் மற்றும் மறைக்கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு சிறப்பு தியானம், நான்காவது வாரம் கேரள மாநிலம் ஆலப்புழா, கிருபாசனம், எடத்துவா ஆகிய இடங்களுக்கு திருப்பயணம், ஐந்தாவது வாரமாக பாளையங்கோட்டை மறைமாவட்டம் புளியம்பட்டி புனித அந்தோணியார் ஆலயத்திற்கு மறைமாவட்ட திருப்பயணமாக கலந்து கொண்டனர்.
6வது வாரம் குருத்தோலை ஞாயிறு நடந்தது. 17ம்தேதி பெரிய வியாழனை முன்னிட்டு திருப்பாதம் கழுவுதல் நடந்தது. 18ம்தேதி புனித வெள்ளியை முன்னிட்டு திருச்சிலுவை பாதை நடந்தது.
19ம்தேதி புனித சனியும் இரவில் பாஸ்கா திருப்பலியும் நடந்தது. தொடர்ந்து நள்ளிரவில் இயேசு உயிர்த்தெழுதல் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு வட்டார அதிபரும், பங்குத் தந்தையுமான அருட்தந்தை போஸ்கோ குணசீலன் அடிகளார் தலைமையில் சிறப்பு திருப்பலிகள் நடந்தது. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் உலக நன்மைக்காக மெழுகுவர்த்தி ஏந்தி சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்றனர்.
தொடர்ந்து இயேசு உயிர்த்தெழுதல் நடந்தது. மேலும் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். ஏற்பாடுகளை வட்டார அதிபரும், பங்குத்தந்தையுமான போஸ்கோ குணசீலன் அடிகளார். உதவி பங்குத்தந்தை மிக்கேல் மகேஷ் செய்திருந்தனர்.

# ரயில்வே நுழைவு பாலங்களில் போக்குவரத்து பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை




ஈரோடு , ஏப்.22
ஈரோடு மாவட்டத்தில் ரயில்வே நுழைவு பாலங்களால் நீண்ட காலமாக நிலவி வரும் போக்குவரத்து பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஈரோடு நகரில் கொல்லம்பாளையம், சென்னிமலை ரோடு, கே.கே.நகர் உள்பட மாவட்டத்தின் பிற பகுதிகளான பாசூர், சாவடிப்பாளையம், பெருந்துறை ஆர்எஸ் உள்ளிட்ட 8க்கும் மேற்பட்ட இடங்களில் ரயில்வே நுழைவுப் பாலங்கள் உள்ளன.
இவற்றில் மழைக்காலங்களில் ஈரோடு கொல்லம்பாளையம், கேகே நகர், சாவடிப்பாளையம், பாசூர், மற்றும் பெருந்துறை ஆர்எஸ் ரயில்வே நுழைவுப் பாலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகி, பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.
நீண்ட காலமாக நிலவி வரும் இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என பொதுமக்களும், பல்வேறு சமூக நல அமைப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.
இதையடுத்து, இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் அடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மாற்றுத்திட்டங்களை வகுத்து வருகின்றனர். அதன்படி, பிரச்னைக்குரிய பகுதிகளில் உயர்மட்ட பாலம் அமைத்தல் அல்லது நுழைவுப் பாலத்தையே அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண்பது குறித்து பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர்.
அதுகுறித்து, நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு, காளை மாட்டு சிலை அருகில் உள்ள கொல்லம்பாளையம் நுழைவுப் பாலத்துக்கு மாற்றாக காளைமாட்டு சிலை முதல் கொல்லம்பாளையம், பூந்துறை ரோட்டில் உள்ள லோட்டஸ் உயர் மட்டப்பாலம் அமைப்பது குறித்து ரயில்வே மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக, கோட்ட பொறியாளர் அலகு மூலமாக அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
அதேபோல, சென்னிமலை ரோடு, கே.கே.நகர் ரயில்வே நுழைவுப் பாலத்தின் கீழ் அடிக்கடி தண்ணீர் தேங்குவது குறித்தும், அப்போது ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கவும் அந்த இடத்தில் 6.70 மீட்டர் அகலம், 5.50 மீட்டர் உயரமுள்ள வகையில் கூடுதலாக 2 கண்ணறை பாலங்கள், ரயில்வே துறை மூலமாக அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
அந்தப் பணியை தென்னக ரயில்வே, சேலம் கோட்ட மேலாளர் ஏற்று கொண்டதன் அடிப்படையில் கூடுதலாக 2 கண்ணறை பாலங்கள் அமைக்கப்படும்.அதேபோல, வெண்டிபாளையம் ரயில்வே கேட் மேம்பாலத்துக்கு பன்னீர்செல்வம் பார்க் வரைலான விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அரசிடம் இருந்து ஒப்புதல் பெறப்பட்டதும், அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.
அதேபோல, பெருதுறை ஆர்.எஸ். முதல் வெள்ளோடு வரை பாலம் குறுகலாக உள்ளது. மேலும் இது ரயில்வே நீர் வழிப்பாலமாகவும் உள்ளது. எனவே அந்த இடத்தில் 6.70 மீட்டர் அகலம் 5.50 மீட்டர் உயரமுள்ளவகையில்கூடுதுலாக 2 கண்ணறை பாலங்கள், ரயில்வே துறை மூலமாக, அவர்களது நிதியில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
தவிர, ஈரோடு கரூர் சாலையிலுள்ள ஆரியங்காட்டு பள்ளம், கேட்டுபுதூர், சாவடிப்பாளையம் முதல் ஆர்.வி.பி. காட்டுப்பாளையம் வரையிலும் ரயில்வே துறை மூலமாக கூடுதலாக கண்ணறை பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.
மேலும், பாசூர் ரயில்வே மேம்பாலம் அமைக்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில், பொது அமைப்பின் வரைபடத்துக்கு ரயில்வே துறை ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இப்பணிகளுக்கான முறையான ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மேல்மலையனூர் அருகே கல்லூரி மாணவி தூக்கிட்டு தற்கொலை

## *காவல்நிலையம் முற்றுகை; சாலை மறியலால் பரபரப்பு

மேல்மலையனூர், ஏப்.22
விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுகா சீயப்பூண்டி கிராமத்தில் வசித்து வருபவர் முருகன். இவருக்கு திருமணமாகி 2 பெண் பிள்ளைகள் உள்ள நிலையில் மூத்த மகள் திலகவதி (17) திருவண்ணா மலையில் உள்ள தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.
இந்நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கினார். இதுகுறித்து தகவலறிந்த மேல்மலையனூர் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று தூக்கில் தொங்கிய மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.
இதனை தொடர்ந்து இறந்த மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மேல்மலையனூர் காவல் நிலையத்தை நள்ளிரவு வரை முற்றுகையிட்டு பெண்ணின் இறப்புக்கு காரணமான நபரை கைது செய்யுமாறு வலியுறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர்செஞ்சிகாவல்துணை கண்காணிப்பாளர் கார்த்திகபிரியா சம்பவ இடத்துக்கு வந்து மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்ததன் பேரில் அவர்கள் அங்கிருந்து திரும்பி சென்றனர்.
இந்நிலையில் நேற்று காலை முதல் உறவினர்கள், மாணவியின் உடலை வாங்க மறுத்து பெண்ணின் இறப்புக்கு காரணமான அதே கிராமத்தை சேர்ந்த வாலிபரை கைது செய்யக்கோரி கிருஷ்ணகிரிபுதுச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாலபாடி கிராமத்தில் திடீர்சாலை மறியலில் ஈடுபட்டனர்.
இதனை தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட 30க்கும் மேற்பட்டவர்களை நல்லான்பிள்ளை பெற்றாள் போலீசார் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

22.4.2025

# பர்கூர், கந்திகுப்பம் பகுதிகளில் 110 சிசிடிவி கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பு; மாவட்ட எஸ்பி தகவல்



கிருஷ்ணகிரி, ஏப்.22

பர்கூர், கந்திகுப்பம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில், 110 சிசிடிவி கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பு பணி மேற்கொள்வதாக மாவட்ட எஸ்பி தெரிவித்தார்.

பர்கூரில் குற்றச்சம்பவங்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வு கூட்டம், எஸ்பி தங்கதுரை தலைமையில் நேற்று நடந்தது. பர்கூர் டிஎஸ்பி முத்துகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் எஸ்பி தங்கதுரை பேசியதாவது:

பர்கூர், கந்திகுப்பம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் கிருஷ்ணகிரி – பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி – சென்னை தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி – ஆந்திரா மாநிலம், சித்தூர் தேசிய நெடுஞ்சாலை என 3 தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. திருப்பத்தூர் மாவட்ட எல்லையும் அமைந்துள்ளன.

இதனால், குற்றச்சம்பவங்களை தடுக்கும் வகையில் 110 சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பொதுமக்களும் தங்களது வீடுகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். வெளியூர் செல்லும் போது, தொடர்புடைய காவல்நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். டூவீலர்களில் விலை உயர்ந்த பொருட்களை வைப்பதை தவிர்க்க வேண்டும்.

வீடுகளை வாடகைக்கு விடும் போது, தொடர்புடையவர்களின் முழு விவரங்களைபெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் நடவடிக்கைகளில் மாற்றம் இருந்தால், உடனடியாக போலீசாருக்கு தகவல் அளிக்க வேண்டும்.

இதேபோல், இருசக்கர வாகனங்களில் பெண்கள் தனியாகவோ, குழந்தைகளுடனோ செல்லும்போது ஹெல்மெட் அணிந்தும், கழுத்தில் போட்டிருக்கும் நகைகளை துணியால் மறைத்தும் செல்ல வேண்டும்.

தங்களை யாரேனும் பின் தொடர்கிறார்களா என்று கவனித்துச் செல்ல வேண்டும். அவர்கள் திடீரென செல்போனையோ அல்லது நகைகளையோ பறிக்க நேரிடும். இதனால் விபத்தும் நேரிடும். கிராம புறங்களில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிபவர்கள் உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் அளிக்க வேண்டும். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவிகள், அரசு மற்றும் தனியார் அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்கள், தங்கள் செல்போனில் காவல் உதவி செயலியை பதிவிறக்கம் செய்து, அவசர உதவிக்கு அழைக்கலாம். மேலும் அவசர உதவி எண்கள் 181, 1098, 1930 மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறை எண் 100 ஆகிய எண்களில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், இன்ஸ்பெக்டர் வளர்மதி, எஸ்ஐ ஆனந்தன், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செல்போனால் மனநிலை பாதிப்பு 14வது மாடியில் இருந்து தவறி விழுந்து பெண் பலி: கோவையில் சோகம்



கோவை, ஏப்.22

கும்பகோணம் அருகே உள்ள மேலக்காவேரி, காவு பாரதி நகரை சேர்ந்தவர் நடராஜன். இவர் கும்பகோணம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் காவலாளியாக பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவரது மனைவி சிவமணி (64). இவர் வீட்டில் இருக்கும்போது அதிக நேரம் செல்போனில் வீடியோக்களை பார்த்து வந்ததாகவும், இதனால் அவரது மனநிலை பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நடராஜன் அவரை டாக்டரிடம் அழைத்துச் சென்றார்.

அவரை பரிசோதனை செய்த டாக்டர் சில நாட்களுக்கு வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லும்படி கூறியுள்ளார். இதையடுத்து நடராஜன் அவரது மனைவி சிவமணியை கோவை கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட்டில் வசித்து வரும் மகள் வீட்டிற்கு அழைத்து வந்தார். தொடர்ந்து இங்கு உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவர் பயன்படுத்தி வந்த செல்போன் தொலைந்துவிட்டது. இதனால் வீட்டில் உள்ளவர்கள் அவருக்கு சிறிய செல்போன் ஒன்றைவாங்கிகொடுத்து உள்ளனர். அது சிவமணிக்கு பிடிக்கவில்லை என தெரிகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சிவமணி 14வது மாடிக்கு காய போட்டு இருந்த துணிகளை எடுக்கச்சென்றார். அப்போது அங்கிருந்து எதிர்பாராதவிதமாக அவர் தவறி கீழே நிறுத்தப்பட்டு இருந்த கார் மீது விழுந்தார். அதில் படுகாயம் அடைந்தஅவரைஅக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து கவுண்டம்பாளையம் போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# தொடர் விடுமுறை காரணமாக ஏலகிரி மலையில் குவிந்த சுற்றுலா பயணிகள்; படகு சவாரி செய்து மகிழ்ச்சி



ஏலகிரி, ஏப்.22

தொடர்விடுமுறை காரணமாக நேற்று ஏலகிரி மலையில் சுற்றுலா பயணிகள் குவிந்து படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் உள்ள ஏலகிரி மலை தமிழ்நாட்டில் சிறந்த சுற்றுலா தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்று வளர்ச்சியடைந்த சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது.

இம்மலை ஏழைகளின் ஊட்டி எனவும், மலைகளின் இளவரசி எனவும் அழைக்கப்படுகிறது. பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜோலார்பேட்டை அருகே ஏலகிரி மலை அமைந்துள்ளது. இம்மலைப்பாதை 14 கொண்டை ஊசி வளைவுகளை கொண்டுள்ளது.

இதனால்அண்டை மாநிலங்களில் இருந்தும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் அங்குள்ள படகு இல்லம், இயற்கை பூங்கா, சிறுவர் பூங்கா, சாகசவிளையாட்டுதலங்கள், பறவைகள் சரணாலயங்கள், மூலிகை பண்ணைகள், மங்கலம் சுவாமி மலை ஏற்றம், தாமரைக்குளம், கதவநாச்சியம்மன் கோயில், ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சி உட்பட பல்வேறு இடங்களை சுற்றிப்பார்த்து பொழுதை போக்கி செல்கின்றனர்.

இந்நிலையில், 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகள் முடிந்ததாலும், 3 நாட்கள் தொடர் விடுமுறை என்பதாலும் ஏலகிரி மலையில் சுற்றுலா பயணிகள் அதிகளவில் குவிந்தனர்.

படகு இல்லத்தில் குடும்பத்தோடும், நண்பர்களோடும் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். மேலும், இயற்கை பூங்காவில் மலர்கள், பூக்கள், ரசித்தும் புல் தரையின் மேல் அமர்ந்து பொழுதுபோக்கினர்.

# கிரேன் பெல்ட் அறுந்து விபத்து 5 டன் இயந்திரம் விழுந்ததில் தொழிலாளி உடல் நசுங்கி பலி; *வாணியம்பாடி அருகே சோகம்



வாணியம்பாடி, ஏப்.23

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு பகுதியில் தோல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் தயார் செய்யும் இன்ஜினியரிங் ஒர்க் ஷாப் உள்ளது. இங்கு தயார் செய்யப்படும் இயந்திரங்கள் தமிழகம், ஆந்திரா மட்டுமின்றி வடமாநிலங்களில் செயல்படும் தோல் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.



இந்நிலையில், இந்த ஒர்க் ஷாப்பில் புதிதாக தயார் செய்த இயந்திரத்தை வடமாநிலத்திற்கு அனுப்புவதற்காககிரேன் உதவியுடன் லாரியில் ஏற்றும் பணி நடந்தது. இப்பணியில் வாணியம்பாடி, கோணாமேடு புத்தன் நகரை சேர்ந்த சுமை தூக்கும் தொழிலாளி ஜெய்சங்கர்(55) என்பவர் உட்பட 6 தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

அப்போது, கிரேனில் இருந்த பளு தூக்கும் பெல்ட் திடீரென அறுந்ததில் சுமார் 5டன்எடையுள்ள இயந்திரம் அங்கிருந்த தொழிலாளி ஜெய்சங்கர் மீது விழுந்தது.

இதில், படுகாயம் அடைந்த அவரைசகதொழிலாளர்கள் மீட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள், ஜெய்சங்கர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த வாணியம்பாடி தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். பின்னர், பலியான தொழிலாளி சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அதே அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தனர். மேலும், இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இயந்திரம் விழுந்து தொழிலாளி உடல் நசுங்கி பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# "மண்டாடி" படத்தில் என் கேரக்டர் சுமாரா இருந்தாலும் நடிக்க முடிவு பண்ணிட்டேன் சத்யராஜ்





தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வந்தவர் சூரி. பின்னர் வெற்றி மாறன் இயக்கிய 'விடுதலை பாகம் 1' படத்தில் முதல் முறையாக கதாநாயகனாக அறிமுகமானார். அதனை தொடர்ந்து, 'கருடன், கொட்டுக்காளி' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தார். இதற்கிடையில் இவர் விலங்கு வெப் தொடரை இயக்கி புகழ்பெற்ற பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கத்தில் 'மாமன்' படத்தில் நடித்துள்ளார். ஐஸ்வர்யா லட்சுமி கதாநாயகியாக நடித்துள்ள இப்படம் வருகிற மே 16ம் தேதி திரைக்கு வர உள்ளது.

இதனையடுத்து, மதிமாறன் புகழேந்தி இயக்கத்தில் சூரி தனது அடுத்த படத்தில் நடிக்க உள்ளார். இப்படத்தில் சூரியுடன் இணைந்து சத்யராஜ், மகிமா நம்பியார் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தை எல்ரட் குமாரின் ஆர்.எஸ். இன்போ நிறுவனம் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். மண்டாடி என்பது கடல் நீர்வாடு பற்றிய அழ்ந்த அறிவு உள்ளவர், நீர் ஓட்டத்தை வைத்து மீன்பிடிக்கும் உத்தி அறிந்தவர் என்றும் கூறப்படுகிறது. இயக்குநர் மதிமாறன் புகழேந்தி ஜி.வி.பிரகாஷ் நடித்த செல்பி படத்தினை இயக்கியுள்ளார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது

இந்நிலையில் இப்படம் குறித்து சில தகவல்களை நடிகர் சத்யராஜ் பகிர்ந்துள்ளார். வீடியோவில் அவர், "மண்டாடி படம் தொடர்பாக இயக்குனர் மதிமாறன் என் வீட்டிற்கு வந்தார். அந்த கதையை சொல்வதற்கு முன்பாக ஒரு மேக்கிங் வீடியோவை காட்டினார். அதை பார்த்து நான் பிரமித்து விட்டேன். இந்த மாதிரி ஒரு படகுப்போட்டி எங்கேயுமே பார்த்ததில்லை கேள்விப்பட்டதில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் ராமேஸ்வரம் பகுதியில் நடக்கிறது என்று சொன்னார். ஒரிஜினல் பந்தயத்தை எடுத்து இருக்கிறார்கள். இதை எப்படி சினிமாவாக எடுக்க முடியும் என யோசித்தேன். அதேசமயம் மனதிற்குள் என் கேரக்டர் சுமாராக இருந்தாலும் நடிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன். அப்புறம் அவர் கதை சொன்னார். கதை கதையும் நன்றாக இருந்தது. என் கேரக்டரும் நன்றாக இருந்தது. எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

மதிமாறன் இதை ஆராய்ச்சி பண்ணி சொல்றாரு. அதுதான் முக்கியம். அவர் மிகவும் ஆழமாக இறங்கி இருக்கிறார். இந்த கதையை எடுக்க மிகவும் செலவாகும். அதற்காக எல்ரெட் குமாருக்கும், வெற்றிமாறனுக்கும் ஹாட்ஸ் ஆப். நல்ல ஒரு கதாநாயகனாக மாறியுள்ள என் அன்பு தம்பி சூரியின் கெட்டப் பிரமாதமாக இருக்கிறது. சூரி எந்த அளவிற்கு இறங்கி வேலை செய்வாரே என்பதை பல படங்களில் பார்த்திருக்கிறோம். அடுத்தது இந்த படத்தின் தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவரும் மிகப்பெரிய ஆட்கள். இந்த படத்தில் நடிக்கவும் இந்த படத்தின் ரிலீஸுக்காகவும் ஒரு சினிமா ரசிகனாக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

# பார்சிலோனா ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றார் ஹோல்கர் ரூனே




பார்சிலோனா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்தது. இதில் நேற்று நடந்த ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில்2வதுஇடத்தில்இருப்பவரும்,2முறைசாம்பியனுமான கார்லஸ் அல்காரஸ், 13ம் நிலை வீரரான ஹோல்கர் ருனேவை (டென்மார்க்) சந்தித்தார்.

1 மணி 40 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் ஹோல்கர் ருனே 76 (86), 62 என்ற நேர் செட்டில் அல்காரசுக்கு அதிர்ச்சி அளித்து கோப்பையை சொந்தமாக்கினார். அவருக்கு இது 5வது சர்வதேச பட்டம். அதே சமயம் 500 தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய போட்டியில் ருனே மகுடம் சூடுவது இதுவே முதல் முறையாகும்.

அவருக்கு ரூ.5¼ கோடியும், 2வது இடம்பிடித்த அல்காரசுக்கு ரூ.2¾ கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. தோல்வியின் மூலம் அல்காரஸ் இன்று வெளியாகும் புதிய தரவரிசை பட்டியலில் ஒரு இடம் குறைந்து 3வது இடத்துக்கு தள்ளப்படுகிறார்.

# ஐரோப்பிய கார் பந்தயம்: அஜித்தின் அணிக்கு 2வது இடம்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான அஜித்குமார், கார் பந்தய வீரராகவும் திகழ்ந்து வருகிறார். இந்த ஆண்டு தொடக்கத்தில்துபாயில்நடந்தகார்பந்தயபோட்டியில் அவரது அணி 3ம் இடம் பிடித்து அசத்தியது.

சமீபத்தில் இத்தாலியில் நடைபெற்ற 12வது மிச்செலின் முகெல்லோ கார் பந்தயத்தில் அஜித்குமார் பங்கேற்ற ரேஸிங் அணி 3ம் இடம் பிடித்தது. இதைத் தொடர்ந்து பெல்ஜியம் நாட்டில் SPA FRANCORCHAMPS சர்கியூட்டில் நடைபெற்ற ஜிடி4 யூரோபியன்சீரிஸ் கார் பந்தயத்தில் அஜித் கலந்துக் கொண்டார்.

இந்த பந்தயத்தில் அஜித்தின் அணி 2வது இடம் பிடித்து சாதித்து இருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது குறித்து அஜித்குமாரின் மேலாளர் சுரேஷ் சந்திரா 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்திய மோட்டார் விளையாட்டு துறைக்கு இது பெருமையான தருணம்" என்று பதிவிட்டுள்ளார். இந்த வெற்றியை அஜித்குமாரின் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

# "சச்சின்" ரீரிலீஸில் வைரலான நடிகை ரஷ்மி நெகிழ்ச்சி

தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரீரிலீஸ் செய்துவருகிறார்கள். அந்தவகையில் கடந்த 2005ம் ஆண்டு விஜய், ஜெனிலியா நடிப்பில் வெளியான 'சச்சின்' திரைப்படம் கடந்த 18ம் தேதி ரீரிலீஸ் ஆனது. 'சச்சின்' திரைப்படம் வெளியாகி 20 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி ரீரிலீஸான நிலையில், இத்திரைப்படத்தை ரசிகர்கள் திரையரங்குகளில் கொண்டாடி வருகின்றனர். புதிய படத்தைப் போலவே டிரைலர் ரிலீஸ், சிங்கிள்ஸ் ரிலீஸ் என இப்படத்திற்கு கடந்த சில வாரங்களாகவே புரோமோஷன் செய்து வந்தார்கள். இந்த ஆண்டு விஜய் நடிக்கும் புதிய படம் எதுவும் வெளியாகவில்லை. அடுத்த ஆண்டு பொங்கலுக்குத்தான் விஜய் தற்போது நடித்து வரும் 'ஜனநாயகன்' படம் வெளியாகிறது. இதனால் இந்த சச்சின் படத்திற்கு மிகுந்த எதிர்பார்ப்புகள் இருந்து வந்தது.

சச்சின் திரைப்படம் முதல் நாளில் செய்துள்ள வசூல் குறித்த விவரம் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் முதல் நாளில் மட்டும் உலகளவில் ரூ. 2 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. படம் ப்ரீ புக்கிங்கில் மட்டும் ரூ.12 லட்சத்துக்கும் அதிகமான வசூலை ஈட்டியதாகக் கூறப்படுகிறது. 60 ஆயிரம் டிக்கெட்டுகளுக்கு மேல் விற்றுத் தீர்ந்ததாக கலைப்புலி தாணு கூறியிருந்தார்.

இந்நிலையில், ரீரிலீஸில் சச்சின் படத்தை பார்த்த பலரும் ஜெனிலியாவிற்கு தோழியாக வரும் பெண்ணை சமூக வலைதளங்களில் வைரலாக்கி வருகின்றனர். ரீரிலீஸில் அவரை ரசித்து பார்த்த பல ரசிகர்கள் அந்த பெண் யார் என இணையதளத்தில் தீவிரமாக தேடி வருகின்றனர். படத்தில் அவர் இடம்பெறும் காட்சிகளை எடிட் செய்து வீடியோவாக வெளியிட்டு ஹார்ட்களை பறக்க விட்ட நிலையில், அவரை கண்டுபிடித்து அவரை பின்தொடர தொடங்கினர்.

திடீர் வைரலானதை அடுத்து அந்தப் பெண் தனது இன்ஸ்டா பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார். அவரது பெயர் ரஷ்மி என்று கூறிய அவர், இவ்வளவு வருடம் கழித்து சச்சின் படத்தை கொண்டாடியதுடன் தன்னையும் ரசிகர்கள் ரசித்து வைரலாக்கி வருவது பெருமையாக இருப்பதாக கூறி ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும் கல்லூரியில் படிக்கும்போது தனக்கு சச்சின் படத்தில் வாய்ப்பு வந்ததாகவும், அதன்படி அந்த வாய்ப்பை ஏற்று சின்ன ரோலில் நடித்த தன்னை இன்று ரசிகர்கள் கொண்டாடி வருவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். சச்சின் படத்தில் நடித்தபோது ரஷ்மிக்கு 20 வயது. தற்போது அவர் திருமணம் முடிந்து கணவர் மற்றும் குழந்தைகளுடன் வெளிநாட்டில் செட்டில் ஆகியுள்ளார். தொழில்முனைவோராக இருப்பதாக ரஷ்மி அந்த வீடியோவில் குறிப்பிட்டுள்ளார்.

# துபே, ஜடேஜா அரைசதம்.. மும்பை அணிக்கு சவாலான இலக்கு நிர்ணயித்த சென்னை

ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்று வரும் 2வது ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார். சென்னை அணியில் ராகுல் திரிபாதிக்கு பதிலாக ஆயுஷ் மாத்ரே அறிமுக வீரராக இடம் பிடித்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரச்சின் ரவீந்திரா ஷேக் ரஷீத் களமிறங்கினர். இதில் ரச்சின் ரவீந்திரா 5 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து வந்த அறிமுக வீரரான ஆயுஷ் மாத்ரே ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். வெறும் 15 பந்துகளில் 32 ரன்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே ஷேக் ரசீத் 19 ரன்களில் நடையை கட்டினார். அந்த சமயத்தில் சென்னை அணி 63 ரன்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இந்த இக்கட்டான சூழலில் கை கோர்த்த ஜடேஜா ஷிவம் துபே சிறப்பாக பார்ட்னர்ஷிப் அமைத்து அணியை முன்னெடுத்து சென்றனர். முதலில் நிதானமாக விளையாடிய இந்த ஜோடி ஒரு கட்டத்திற்கு மேல் அதிரடியில் களமிறங்கியது. 79 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் ஷிவம் துபே 50 ரன்களில் ஆட்டமிழந்தார். முன்னதாக 37 ரன்களில் இருந்தபோது ஷிவம் துபே கொடுத்த கேட்சை தவற விட்ட பும்ரா, அவரின் விக்கெட்டை கைப்பற்றி பரிகாரம் தேடி கொண்டார். அடுத்து வந்த தோனி 4 ரன்களில் ஏமாற்றினார். இருப்பினும் ஜடேஜா இறுதி வரை களத்தில் இருந்து சென்னை அணி சவாலான இலக்கை எட்ட உதவினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் 5 விக்கெட்டுகளை இழந்து 176 ரன்கள் அடித்துள்ளது. ஜடேஜா 53 ரன்களுடனும், ஓவர்டான் 4 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். மும்பை தரப்பில் அதிகபட்சமாக பும்ரா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 177 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி மும்பை களமிறங்க உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.